# சிறுவர் அமுதம்

19.12.98

எண்ணம் .9 கிண்ணம் .12



சிறுவர் இலக்கிய மாத சஞ்சிகை

Kinder literarisches Magazin

## ஔவையின் புலமை



ஔவையாரின் வரலாற்றைச் சென்ற இதழில் பார்த்துக் கொண்டோம். இம்முறையில் இருந்து ஔவையின் சில பாடல்களைப் பற்றி அறிந்து கொள்ளுவோம். தற்காலத்துக்கும் பொருந்தும்படியாக ஔவையின் பாடல்கள் நீதியைச் சொல்லுகின்றன.

ஔவையார் சிறந்த புலவர். நாடாண்ட மன்னவர்களும், பிரபுக்களும் அவரை அறிந்திருந்தனர். அவர் விரும்பியிருந்தால் யாராவது அரசர்களுடனோ, பிரபுக்களுடனோ

தங்கி வாழ்ந்திருக்கலாம். ஆனால் ஔவையார் பாமர மக்களுடனும் நன்றாகப் பழகி வந்தார். இதனால் சிலவேளைகளில் அரசர்கள் பெரும் புலவர்கள் மத்தியில் இழிவாகக்கூடக் கருதப்பட்டார்.

ஒருமுறை ஔவையார் சோழ நாட்டுக்கு வந்தார். சோழ நாட்டின் அரண்மனையில் கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி போன்ற புலவர்கள் செல்வாக்குப் பெற்று விளங்கினார்கள். பட்டுடையும், பகட்டான வாழ்க்கையும் அவர்களைப் பெரிதும் உயர்ந்தவர்களாகப் பறை சாற்றிக் கொண்டிருந்தது. அவர்களுள்ளும் கம்பருக்கு அரசசபையில் மிகவும் செல்வாக்கு இருந்தது.

அவரைச் சுற்றி ஒரு புலவர் கூட்டமே இருந்தது. கம்பர் எதை எப்படிச் சொன்னாலும் அதற்கு மறுப்பேதும் இல்லை. எப்படி மட்டரகமான பாட்டாக இருந்தாலும் அவர்கள் "ஆகா! ஓகோ!" என்று புகழ்வார்கள் பாட்டும் பிரபலம் அடைந்து விடும். இதனால் மிகவும் கர்வம் கொண்ட புலவராகக் கம்பர் விளங்கினார். கம்பரின் ஆடம்பரமான வாழ்க்கையும், போலித்தனமான அவரது வாழ்க்கையும் மிகவும் வெறுப்பைத் தந்தன.

கம்பரின் பாடல் ஒன்று சபையில் அரங்கேறியது. மன்னனும் மற்றவர்களும் அதனைப் பெரிதும் புகழ்ந்து பாராட்டினார்கள். ஔவையாருக்கோ பாடலில் எந்த விதமான சுவையும் தெரியவில்லை. மௌனமாக இருந்து மெல்லச் சிரித்தார் ஔவையார். மன்னன் இதனைக் கவனித்தான். ஔவையே எதுவுமே பேசாமல் இருக்கின்றீர்களே?. பாடலைப் பற்றி ஏதாவது கூறுங்கள்." என்று சொன்னான்.

பாடல் ஒன்றைப் பார்க்கும் போது அதை எழுதியவரைப் பற்றிப் பார்க்கக் கூடாது. அப் பாடலில் உள்ள சொல் வளம், பொருள் வளம் ஆகியவற்றை ஆராய வேண்டும். இங்கேயோ கம்பர் எழுதிய பாடல் என்பதற்காக எல்லோரும் அவரைப் புகழ்கிறீர்கள். எளிமை, அமைதியாக இருப்பவர்கள், அடக்கம் உள்ளவர்கள் பாடும் எவ்வளவு நல்ல வளமான பாடல்களும் சபையில் அரங்கேறுவதில்லை.

பட்டும், நகைகளும் முதலிடத்தைப் பெறுகின்றது. என்று சொல்லி விட்டுப் இந்தப் பாடலையும் பாடினார்.

"விரகர் இருவர் புகழ்ந்திட வேண்டும்
விரல் நிறைய மோதிரங்கள் வேண்டும்-
அரையதனில்

பஞ்சேனும் பட்டேனும் வேண்டும்-அவர்கவிதை
நஞ்சேனும் வேம்பேனும் நன்று.

அரசனின் பாராட்டைப் பெறுவதற்கும், அவனது உதவி பெற்று ஆடம்பரமாக வாழ்வதற்கும் புலவர்கள் விரும்புகின்றார்கள். அதற்காகத் தாங்கள் சொல்லும் வார்த்தைகளை (கவிதைகளை) நல்லதாக இருந்தாலென்ன, வெறும் வார்த்தைகளாக இருந்தாலென்ன அதைப் புகழ்வதற்காக இருவரைக் கூடவே வைத்திருக்க வேண்டும். இது புலவரின் தந்திரங்கள். புலவர் கை நிறைய மோதிரங்கள் அணிந்திருக்க வேண்டும். இடையில் பட்டாலான ஆடைகள் அணிந்திருக்க வேண்டும். அப்படிப் பட்ட புலவர்கள் பாடும் பாடல்களில் தரம் இருந்தாலென்ன, தரமில்லாமல் வேம்பைப் போல கசப்பானதாக இருந்தாலும், நஞ்சைப் போல மற்றவர்களுக்கு வேதனை தரக் கூடியதாக இருந்தாலும் அந்தப் பாடல் மிகவும் நல்லதென மற்றவர்கள் புகழ்வார்கள்.

இதுவே ஔவையார் பாடிய பாடலின் பொருளாகும். வெளிப் பகட்டும், விளம்பரமுமே உலகில் நிரந்தரமாகத் தங்கி இருக்கின்றன. இது நல்லதல்ல. ஔவையின் கூற்று இன்று வரையில் உலகில் நடந்து கொண்டு தான் இருக்கின்றது.

# உழவுத் தொழில்

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்-வீணில்
உண்டு கழித்திருப்போரை நிந்தனை செய்வோம்."
-மகாகவி. சுப்பிரமணியபாரதியார்-



என்ற முழக்கம் இன்றும் நம் காதில் முழங்குகின்றது. ஆம்! உழவுத்தொழிலே எமக்கெல்லாம் உணவு போடும் தொழிலாகும். ஆதி காலத்தில் இடத்துக்கிடம் அலைந்து திரிந்த மனிதன், முதன்முதல் நதிக்கரை ஓரங்களில் விவசாயம்

செய்வதற்காகவே நிலையாகத் தங்கி வாழத் தொடங்கினான்.

உலகில் எங்கு பார்க்கிலும் இவ்வுழவுத் தொழில் காணப்படுகின்றது. உழவர்கள் எமக்கு உணவு தரும் தொழிலாளர்களாவார். உழவுத் தொழில் சிறப்புற்று ஓங்கின் அந்த நாடே சிறப்புறும் என்பது நாம் அறிந்ததே. இதை அறிந்தே அன்று ஔவைப்பாட்டியும் மன்னன் ஒருவனை வாழ்த்தும் போது "வரப்புயர" என்று மட்டும் வாழ்த்தினார். ஆம்! வரம்பு உயர அதனூடே பாயும் நீர் உயரும். நீர் உயர்ந்தால் விளைவித்திருக்கும் நெல்லின் விளைச்சல் அதிகரிக்கும். விளைச்சலால் நாட்டு மக்களின் பசி இல்லாமல் போகும். அரசனின் செங்கோல் உயரும். அரசனும் உயருவான்.

இன்றும் ஒரு கவிஞர்,

"ஏர் முனைக்கு நேர் இங்கே எதுவுமேயில்லை
என்றும் நம்ம வாழ்விலே பஞ்சமேயில்லை."

என்று பாடியிருப்பது உழவுத் தொழிலின் உயர்வை எமக்கு எடுத்துக் காட்டுகின்றது. நம் பண்டைய மன்னர்களும், இன்றைய அரசுகளும் உழவுத் தொழிலின் முக்கியத்துவத்தை உணர்ந்து பல்வேறு உதவிகளையும் மானியமாக வழங்கிக் கொண்டிருப்பதை நாம் காண்கிறோம். உழவுத் தொழிலுக்கு சிறந்த காலநிலையும், மண்வளமும், நிதியும், தொழிலாளரும் அவசியம். விருத்தி

அடைந்த நாடுகளில் நவீன யந்திரங்களின் உதவியுடன் உழவுத் தொழில் சிறப்பாக நடைபெறுகிறது.

விருத்தியடைந்து வரும் எமது நாடுகளில் உழவுத்தொழிலுக்குப் பாரிய நவீன யந்திரங்கள் புகுத்தப் படாவிட்டாலும், ஓரளவு நவீன முறைகளில் உழவுத்தொழில் சிறப்பாக நடைபெறுகின்றது. எது எவ்வாறிருப்பினும் உழவுத்தொழில் ஒரு நாட்டில் சிறப்பாகக் காணப்படின் பஞ்சம் பறந்தோடிச் செல்வமும் சிறப்பும் மிக்க நாடாக அந்நாடு விளங்கும் என்பதில் ஐயமில்லை. இதனாலேயே,

"உழுதுண்டு வாழ்பவர்க்கு ஒப்பில்லைக் கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு"

என்றார் வள்ளுவப் பெருந்தகை.

உழவுத் தொழில் உயர்வு தரும் ஒரு தொழிலாகும். பசியைப் போக்கிப் பஞ்சத்தையும் நீக்கி விடிவைத் தரக்கூடிய தொழில் ஒன்றுள்ளதெனில், அது உழவுத் தொழில் ஒன்றே எனலாம்.

-சிவாஸ்கர் சிவராஜா-

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

துன்பத்தைக் போக்க யாராலும் முடியாது. அதைப் போக்கக் காலத்தால்தான் முடியும்.

-ஜோபேட்-

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖



அரக்கு மாளிகையில் இருந்து தன் சகோதரர்களோடும், தாயாரோடும் தப்பிய வீமன் காட்டுக்குள்ளே தங்கினான். அந்தக் காடு இடும்பன் என்னும் அரக்கனுக்குச் சொந்தமானது. இடும்பவனம் என்று அதற்குப் பெயர். அங்கு அவன் தன் தங்கையாகிய இடும்பியுடன் வாழ்ந்து வந்தான். அவன் நன்றாக மாமிசம் உண்பவன். அதுவும் மனித மாமிசமானால் விரும்பிச் சாப்பிடுவான். உணவைத் தேடி அவன் தான் செல்வதில்லை. தங்கையாகிய இடும்பியைத் தான் அனுப்புவான்.

அவளும் வேட்டையாடி அவனுக்கும் உணவு கொடுத்துத் தானும் உண்ணுவாள். அன்றும் அவ்வாறே உணவைத் தேடிக் கொண்டு வந்த இடும்பி, சகோதரர்களுக்கும் தாயாருக்கும் பசிக்கு உண்பதற்காகக் காய்கனிகள் தேடி அங்கும்இங்குமாக அலைந்து கொண்டிருந்த வீமனைக் கண்டாள். வீமனைப் பார்த்ததும், அவனது வலிமையான உடலமைப்பிலும், அழகிலும் ஆசை கொண்டாள். அவனைத் திருமணம் செய்து கொண்டு வாழ ஆசைப் பட்டாள்.

அதனால் அவனை நோக்கி இடும்பி வந்து கொண்டிருந்தாள். அவளைக் கண்டதும் வீமன், "பெண்ணே! இக் கொடிய காட்டில் நீ பயப்படாமல் திரிகின்றாய். நீ யார்?" என்று அன்போடு கேட்டான். அப்போது இடும்பி "நான் கேட்க வேண்டிய கேள்வியை நீர் கேட்கின்றீரே? நான் இந்த இடும்பவனத்தை ஆண்டு கொண்டிருக்கும் இடும்பன் என்னும் அரக்கனின் தங்கை. என் அண்ணனுக்காக உணவு தேடி வந்தேன். உம்மை இங்கு நான் காணவேயில்லையே?. நீர் யார?" என்று வினாவினாள்.

வீமன் தான் யார் என்பதையும், தாங்கள் அந்த வனத்துக்குள் வந்த வரலாற்றையும் கூறினான். அதற்கு இடும்பி, "மனிதனே உன்னிடம் எனக்கு அன்பு அதிகமாகின்றது. நான் செல்வதற்கு நேரம்

அதிகமானால் அண்ணன் என்னைத் தேடி வந்து விடுவான். ஆகையால் நீரும் உமது குடும்பத்தினரும் இங்கிருந்து விரைவாகத் தப்பி விடுங்கள்." என்று கூறினாள். அதற்கு வீமன் மறுமொழி கூறுமுன் அங்கே இடும்பன் பெரிதாகச் சத்தமிட்டவாறே வந்து சேர்ந்தான்.

"யாரோடு பேசுகின்றாய்? இந்த மனிதனா பேசுவதற்குக் கிடைத்தான். உனக்கு வெட்கமாக இல்லை. எனக்கு இன்று நல்ல உணவு கிடைத்தது." என்று கூறியவாறே வீமன் மேல் பாய்ந்தான். வீமனுக்கும் அவனுக்கும் பெருத்த மல்யுத்தம் மூண்டது. இருவரது சத்தத்திலும் காட்டு விலங்குகள் அங்கும் இங்கும் ஓடின. பெரிதான சத்தம் கேட்டு குந்திதேவியும், மற்றைய சகோதரர்களுமஇ அந்த இடத்துக்கு ஓடி வந்தனர்.

வீமனுக்கும் இடும்பனுக்கும் நடந்த அந்த யுத்தத்தில் இடும்பன் இறந்தான். தமயன் இறந்தது கண்டு இடும்பி பெரும்கவலை கொண்டாள். குந்திதேவி அவளுக்குத் தாயாரைப் போல ஆறுதல் கூறினாள். பின் பாண்டவர்களும், குந்திதேவியும் அங்கிருந்து புறப்பட்டனர். அந்தவேளையில் இடும்பி "தாயே! அண்ணன் இருக்கின்றான் என்று இந்த வனத்தில் வாழ்ந்தேன். இனி எப்படித் தனித்து வாழுவேன். உங்கள் மகனை எனக்கு மணம் செய்து விடுங்கள் நான் உங்களுடனேயே வந்து விடுகிறேன்." என்று அழுதவாறே கூறினாள்.

தமயனாகிய தருமன் மணம் செய்யாமல் நான் மணம் செய்யக் கூடாது என்று வீமன் மறுத்தான்.


அப்போது தருமரும் குந்திதேவியும் வீமனைத் திருமணம் செய்யும்படி தூண்டினார்கள். வீமனும் அவர்களுக்கு மறுப்புச் சொல்லாமல் இடும்பியைத் திருமணம் செய்தான். அதன் பின் இடும்பியையும் அழைத்துக் கொண்டு பாண்டவர்களும் குந்திதேவியும் வனத்தில் நல்ல இடத்தைத் தேர்ந்து அங்கிருந்து வாழ்ந்து வந்தனர்.

-தொடரும்-

❖

உங்கள் ஐந்து விரல்களில் அதிசயமான விரல் எது தெரியுமா? பெருவிரல் அதாவது கட்டை விரல் தான். பெருவிரல் இல்லாவிட்டால் எந்த வேலையையும் செய்ய முடியாது. பெருவிரல் மற்றைய விரல்களோடு நேரடித் தொடர்பு கொண்டது. மனிதனுக்கும், சிலவகை மனிதக் குரங்குகளுக்கும் மட்டுமே பெருவிரலால் சின்ன விரலின் அடியை எட்ட முடியும். இப்போது அறிந்து கொண்டீர்களா பெருவிரலுக்கு எப்படி பெருமை வந்தது என்று.

# திருடனின் நேர்மை



கணேசன் அந்த ஊரில் மிகவும் பிரபலம் உள்ளவனாக இருந்தான். எதில் பிரபலமானான் என்று நினைக்கிறீர்கள். அவனிடம் பொய், களவு, கொலை போன்றவற்றில் தான். ஒருதரம் நகரத்துக்குச் செல்லும் வழியில், அவனுக்குச் சிறுவயதில் கல்வி கற்பித்த ஆசிரியரைச் சந்தித்தான்.

ஆசிரியர் அவனிடம் "கணேசா என்ன தொழில் செய்கிறாய்?" என்று விசாரித்தார். அவன் எப்படித் தன் தொழிலைச் சொல்ல முடியும்?. அதனால் மௌனமாக நின்றான். அவன் சிறுவயதிலேயே பொய்,களவு போன்றவற்றில் பிரபல்யமாக இருந்தான். இது ஆசிரியருக்கும் தெரியும். ஆசிரியர் அவனைப் பார்த்து

"கணேசா, நீ என்ன தொழில் செய்கிறாய் என்பது, நீ சொல்லாமலேயே எனக்குத் தெரியும். ஆனாலும் நீ எதையும் செய். எனக்காகப் பொய்யை மட்டும் விட்டுவிடு." என்றார்.

கணேசனும் ஒப்புக் கொண்டான். அன்று முதல் பொய் சொல்லாமல் இருப்பதாகத் தனக்குள் சத்தியம் செய்து கொண்டான். ஒருநாள் கணேசன் ஒரு பெரிய பங்களாவைக் கண்டான். அது ஒரு வைரவியாபாரியின் பங்களா என்றும் அறிந்து கொண்டான். வாசலில் இரண்டு காவலர்கள். உள்ளேயும் நிறைய வேலையாட்கள் வேலை செய்து கொண்டிருந்தார்கள். கணேசனும் எப்படியாவது பங்களாவுக்குள் நுழையத் தருணம் பார்த்துக் கொண்டிருந்தான்.

அதற்கான சந்தர்ப்பமும் அவனுக்கு ஓரிரவு கிடைத்தது. ஊரிலுள்ள அம்மன் கோயிலில் திருவிழா நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதற்காக வேலையாட்களுக்குக் கோயிலுக்குச் செல்ல வைரவியாபாரி அனுமதி கொடுத்திருந்தார் முதலாளியான வைர வியாபாரி. இதனால் வேலையாட்கள் குறைவாக இருந்தார்கள். அவ்வேளை திருடுவதற்குத் தகுந்ததாகக் கணேசனுக்குத் தென்பட்டது. பங்களாவுக்குள் நுழைந்தான். திருடனுக்கு திருட்டுத்தனமாக நுழைவதற்கு யாராவது சொல்லிக் கொடுக்க வேண்டுமா? என்ன?

உள்ளே நுழைந்த கணேசன் வைரங்கள் வைத்திருக்கும் அறைக்குள் போனான். வைர

ஆபரணங்களைத் திருடினால் கண்டு பிடித்து விடுவார்கள் என்று யோசித்தான். ஒரு சிறிய பெட்டிக்குள் வைரக்கற்கள் இருந்தன. அவற்றை எடுக்கும்போது காலடிச் சத்தம் கேட்கவே, கிடைத்ததை எடுத்துக் கொண்டு இரகசியமாக வெளியேறித் தெருவில் இறங்கினான்.

எதிரில் வைரவியாபாரி வந்ததை அவன் காணவில்லை. அவரைக் கண்டாலும் இவர்தான் வைரவியாபாரி என்று கணேசனுக்குத் தெரியாது. மதிலில் ஏறி இறங்குவதை வைரவியாபாரி கண்டார். சாமர்த்தியமாக அவனைப் பிடித்து விட எண்ணினார். "நான் நீ மதிலில் இருந்து இறங்குவதைப் பார்த்தேன். நான் வரச் சிறிது தாமதமாகி விட்டது. நிறைய நகைகள் எல்லாம் இருந்திருக்குமே!. எதையுமே எடுக்காமல் வந்து விட்டாயா?" என்று கேட்டார்.

அதற்குக் கணேசன் "நானும் அப்படித்தான் நினைத்தேன். ஆனால் முடியவில்லை. கட்டுக்காவல் அதிகம். காவல்காரரைத் தாண்டி வர எவ்வளவு சிரமப்பட்டேன் தெரியுமா?. கொண்டு வந்த வைரங்களை எண்ணிப் பார்க்கக் கூட இல்லை. நீ போனால் நிச்சியம் காவலர்களின் கைகளில் அகப்பட்டு விடுவாய். ஆனபடியால் என்னிடம் இருக்கும் வைரங்களில் உனக்கும் அரைவாசியைத் தருகிறேன். என்று சொல்லி அரைவாசி வைரக்கற்களை வைரவியாபாரியிடம் கொடுத்தான்.

வைரவியாபாரி கணேசனிடம் ஊர், பேர் போன்றவற்றை விசாரித்து விட்டு, ஒரு நண்பனைப் போல கணேசனைக் கட்டித் தழுவிக் கொண்டு "மீண்டும் சந்திப்போம்" என்று சொல்லி விடை கொடுத்து அனுப்பினார். பின்பு வைரங்கள் இருந்த அறைக்குள் வந்து பார்த்தார். நம்பிக்கையான சிற்பந்திகளைக் கொண்டு நகைகளைக் கணக்கிட்டார். அங்கு கணேசன் சொல்லியபடி மீதி வைரக்கற்கள் இருந்தன. கணேசனின் நேர்மையைக் கண்டு தனக்குள் வியந்து கொண்டார். தன் உதவியாளரையும் சோதித்துப் பார்க்க எண்ணினார்.

உதவியாளரை அழைத்து, "தனபால்! யாரோ திருடன் நகைகளை எடுத்துக் கொண்டு ஓடியிருக்கிறான். ஒருதரம் நகைகளைக் கணக்கிடுங்கள். மற்றவர்களிடம் எனக்கு நம்பிக்கை கிடையாது." என்று சொல்லித் தனபாலன் என்ற தன் உதவியாளனை அனுப்பினார். அறைக்குள் சென்ற தனபாலன் நகைகளைச் சோதனை செய்தான். நகைகளில் இரண்டொரு நகைகளை எடுத்துக் கொண்டான். மிகுதியாக இருந்த வைரக்கற்களையும் எடுத்துக் கொண்டான்.

பின்பு வைரவியாபாரியிடம் வந்து, "இரண்டொரு நகைகளையும், வைரக்கற்களையும் திருடன் எடுத்துச் சென்றிருக்கிறான்." என்று கூறினான். வைரவியாபாரி "அப்படியா?" என்று கூறி விட்டு பங்களாவுக்குள் சென்றார். பின் தன் வேலையாளை அனுப்பிக் கணேசனை வரவழைத்தார். பின் தனபாலனிடம், "வைரம் களவாடிய திருடன் இவன் தான். இவனிடம் விசாரிப்போம்." என்று கூறியதும், கணேசனுக்கு அவர்

குரலை எங்கேயோ கேட்டதாகத் தோன்றியது. வைரவியாபாரியை உற்றுப் பார்த்தான்.

வைரவியாபாரி அவனைப் பார்த்து, "நண்பனே, என்னைத் தெரியவில்லை." என்று கூறியதும் கணேசன் அவர் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்கக் குனிந்தான். அப்போது வைரவியாபாரி "நண்பர்கள் மன்னிப்புக் கேட்கக்கூடாது." என்று கூறி கணேசனைத் தழுவிக் கொண்டார். திகைத்து நிற்ற மற்றவர்களிடம் நடந்த சம்பவங்களை விபரித்தார். தனபால் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். வைரவியாபாரி கணேசனைத் தன் அந்தரங்க உதவியாளராக வைத்துக் கொண்டார். தனபாலனையும் தன் உதவியாளராகச் சேர்த்துக் கொண்டார்.

தன் ஆசிரியரின் சொல்லைத் தட்டாமல் உண்மை பேசியதால் தான் தனக்கு இப்படியான வாழ்வு கிடைத்தது என்று எண்ணிக் கொண்ட கணேசன் ஆசிரியரை மனதார வாழ்த்திக் கொண்டான். தன்னிடமுள்ள மற்றைய கெட்ட செயல்களையும் விட்டு விட்டான். உண்மை பேசியதால் கணேசனுக்கு உயர்வான வாழ்வு கிடைத்தது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

ஆதாரமில்லாமல் தோன்றும் பயங்களை எல்லாம் விரட்டி விட்டால், மனித சமூகம் பெரிதும் மகிழ்ச்சி அடையும்.

-ஜான்ஸன்-

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# நோய் தீர்க்கும் மருந்து





HIPPOCRATIC OATH

ஹிப்போகிரேட்ஸுக்கு முன் வாழ்ந்த கிரேக்க மருத்துவர்கள் மூடநம்பிக்கைகளை உள்ளவர்களாக இருந்தார்கள். மனிதர்கள் மீது கடவுள் கொண்ட கோபத்தினாலேயே நோய்கள் மனிதர்களுக்கு வருவதாக நம்பியது மட்டுமல்லாமல் போதித்தும் வந்தார்கள். ஆனால் ஹிப்போகிரேட்ஸ் அவற்றை மறுத்தார். நோய்கள் மனிதனுக்கு இயற்கையாகவே வருபவை என்று நிரூபித்தார். அவரது அன்றைய கொள்கைகள் உண்மையானவை.

எளிமையான மூலிகை மருந்துகளையே உபயோகித்து வைத்தியம் செய்தார். நோய் கொண்ட ஒருவர் சத்தான உணவு, சுத்தமான காற்று, உடற் பயிற்சிகள் ஆகியவை நோய்களை மாற்றும் தன்மை கொண்டவை என்பதையும் இவர் நிரூபித்தார். சில நோய்கள் நாடுகளின் இயற்கைத் தன்மைக்கேற்ப கடுமையான தன்மை கொண்டவையாகவும், சில நாடுகளில் இலேசான தன்மை கொண்டவைகளாக இருப்பதையும் இவரும் இவரது சீடர்களும் உணர்ந்து கொண்டார்கள்.

ஹிப்போகிரேட்ஸும், அவரது சீடர்களும் அறுவை சிகிச்சை, எலும்பு விலகல், எலும்பு முறிவு போன்றவற்றிற்கும் திறமையான சிகிச்சையாளர்களாக விளங்கினார்கள். நெருப்பினால் குணமாகாத நோய்கள் கத்தியினாலும், கத்தியினால் குணமாகாத நோய்கள் நெருப்பினாலும் (தற்காலத்தில் மின்சாரக் கதிர்கள் மூலம்) குணமாக்கலாம் என்பது இவரது கொள்கை. இவைகளால் குணமாகாதவை எதனாலும் குணமாகாது என்பது இவரது அசைக்க முடியாத நம்பிக்கைகள்.

இதற்காகக் கிரேக்கர்கள் தான் நோய்களுக்கான மருந்துகளைக் கண்டு பிடித்தார்கள் என்று முழுமையாகக் கொண்டு விட முடியாது. எகிப்து நாட்டில் ஒரு மருத்துவக் கல்லூரியே இயங்கியதற்குச் சான்றுகள் உண்டு. ஆனாலும் பழைய மருத்துவக் குறிப்புகள் எல்லாம்

ஹிப்போரேட்ஸ் மருத்துவப் புத்தகம் என்றே அழைக்கப்படுகின்றன.

ஒரு மருத்துவக் குறிப்பு புனிதமான நோய் என்று ஒன்றைக் குறிப்பிடுகின்றது. அது வலிப்பு நோயைப் பற்றி எழுதப் பட்ட குறிப்பாகும். இதற்கு இந்தப் பெயரை ஏன் சூட்டினார்கள் என்று தெரியவில்லை. இந்த நோய்க்கான உண்மையான காரணத்தை அறிய முடியாததே இதற்குக் காரணமாகும். இக்குறிப்பு கி.மு 400 ஆண்டுக்காலத்தில் எழுதப்பட்டதாகும்.

அலெக்ஸாந்திரியாவில் இயங்கி வந்த கிரேக்க மருத்துவப் பள்ளியில் ஹீரோ.ஃ.பிலஸ் **(Herophiles)** என்ற மருத்துவர் புகழ் பெற்றவராக இருந்தார். நாடித் துடிப்பில் இருந்து நோயைக் கண்டு பிடித்த பெருமைக்குரியவர் இவர்தான். நாடித்துடிப்பைக் கணக்கிட அப்போது கடிகாரம் இருக்கவில்லை. ஆனாலும் நீர்க்கடிகாரம் என்ற பொருளை இதற்குப் பாவித்தனர். மத்திய தரைக் கடலைச் சூழ்ந்த நாடுகளில் எல்லாம் கிரேக்க மருத்துவம் பெயர் பெற்றிருந்தது.

-தொடரும்-

# கிழவனும் சுளவானும்



தர்மன் என்று ஒரு கிழவன் இருந்தான். வயதான காலத்திலும் அவன் தான் செய்து வந்த தொழிலான விறகு வெட்டி விற்றுப் பிழைத்து வந்தான். அவனுக்குப் பிள்ளைகள் இல்லை. ஒருதரம் விறகு வெட்டிக் கொண்டு, அதைத் தலையில் வைத்துக் கொண்டு நடந்தான். கிழவனான படியால் அவனுக்கு மூச்சு விடக் கூட முடியாமல் களைத்தது.

அதனால் அவன் "ஐயோ, என் சண்முகா! ஏன் என்னைப் படைத்தாய்? பிள்ளைகள் இல்லை. யாருக்காக என்னை வாழச் சொல்கிறாய். என்னைச் சாக வைத்தால் என்ன? என்று சொல்லி விட்டு, பெரிய சத்தத்தில் "சண்முகா" என்று வேதனையுடன் கத்தினான். அதே வேளையில் அந்த வழியில் சண்முகம் என்னும் கனவான் வந்தார். அவர் கிழவன் அருகில் வந்தார்.

"ஐயா, ஏன் என்னை அழைத்தீர்கள்?" என்று கேட்டார். கிழவன் "உங்களைக் கூப்பிடவில்லை. தம்பி, இந்த வயதான காலத்தில் ஏன் வாழ்கிறேன். அதை நினைத்துக் கொண்டு "சண்முகா" என்று முருகக் கடவுளை நினைத்துக் கொண்டேன். வேறொன்றும் இல்லை." என்றான். கனவானுக்கோ கிழவனைப் பார்க்க வேதனையாக இருந்தது.

"ஐயா, எனக்குத் தாயும் தந்தையும் இல்லை. அதிலும் தந்தையை நான் கண்டதேயில்லை. என் மகள் தன் சினேகிதிகளுக்குத் தாத்தா உண்டு. தனக்கு மட்டும் இல்லை என்று கவலைப் படுகிறாள். உங்களுக்கு யாரும் இல்லை என்றால் நீங்கள் என்னுடன் வாருங்கள். என் மகளுக்குத் தாத்தாவாக இருங்கள்." என்று கூறித் தன்னுடன் அழைத்துக் கொண்டு போனார். அன்று முதல் தருமன் கஷ்டமில்லாமல் வாழ்ந்து வந்தான்.

# லிங்கனும் சிறுமியும்





ஆப்பிரகாம் லிங்கன் சிறியவர்களாக இருந்தாலென்ன, பெரியவர்களாக இருந்தாலென்ன அவர்கள் சொல்வதை ஏற்றுக் கொண்டு சரியானதாகத் தோன்றினால் அதை ஏற்றுக் கொள்ளுவார். இதற்கு உதாரணமாக, அவர் வாழ்வில் நடந்த முக்கியமான சம்பவம் ஒன்றைக் கூறலாம்.

ஆப்பிரகாம் லிங்கன் கவர்ச்சிகரமான தோற்றமோ, அழகோ இல்லாதவர். மெலிந்த தோற்றம் யாரையுமே வசீகரிக்கும் எவ்விதத் தன்மையும் அவரிடம் இல்லை. ஆனால் தன்னுடைய விடாமுயற்சியினால், தன்

உழைப்பினால் முன்னேறி வந்தார். இதனால் சிறிதளவு பிரபல்யமாக இருந்தார்.

பின் சட்டத்தரணியாக இருந்தபோது சிறிதளவு புகழையும் சம்பாதித்தார். அரசியலில் ஈடுபாடு கொண்டு குடியரசுத் தலைவர் பதவிக்குப் போட்டியிட்ட வேளையில், அவரது படம் பத்திரிகையில் பிரசுரம் செய்யப்பட்டிருந்தது. நியூயோர்க்கில் இருந்த பதினாறு வயதான சிறுமி கிரேஸ் என்பவள் தன் தந்தையிடம் கேட்டாள், "அப்பா இவருக்கு யாராவது வாக்குப் போடுவார்களா?. இவர் ஏன் தான் இந்தத் தேர்தலில் நிற்கிறார். இவர் தோல்வி அடையப் போகிறார்." என்றாள்.

தந்தை சிரித்துக் கொண்டே, "ஏன் அப்படிச் சொல்கிறாய்? ஏன் தேர்தலில் நிற்பதற்குரிய படிப்பும், தகுதியும் அவருக்கு இருக்கிறது." என்றார். "படிப்பும் தகுதியும் மட்டும் இருந்தால் போதுமா அப்பா?. பார்ப்பதற்கு குடியரசுத் தலைவருக்கான தோற்றம் இல்லையே அப்பா." என்று கூறி விட்டுச் சென்று விட்டாள். உண்மைதான். லிங்கனிடம் அவை இருக்கவில்லைத்தான்.

கிரேஸ் தன் தந்தையின் மூலம் லிங்கனின் வாழ்க்கையைப் பற்றி அறிந்திருந்தாள். லிங்கன் எப்படியாவது தேர்தலில் வென்று விட வேண்டும் என்று எண்ணமும் அவளுக்கு இருந்தது. அதற்காகச் சிறுமியாகிய அவள் என்ன செய்து விட முடியும்! ஆனாலும் அவள் லிங்கனைப் பற்றியே கவலைப் படத் தொடங்கினாள். இவ்வளவு அறிவையும் திறமையையும் கொடுத்த இறைவன் அவருக்கு ஏன் ஒரு கவர்ச்சியான மிடுக்கான தோற்றத்தைக் கொடுக்கவில்லை. இதே சிந்தனையில் அவள் வேதனைப்படத் தொடங்கினாள்.

ஒருதரம் பத்திரிகையில் வந்திருந்த லிங்கனின் படத்திற்கு, ஏதோ சிந்தனை வயப்பட்டவாறே மீசையும் தாடியும் வரைந்து விட்டாள். லிங்கனின் உருவத்தில் இருந்த கம்பீரத்தைப் பார்த்துத் திகைத்து விட்டாள். அவள் தன் எண்ணத்தை ஆபிரகாம்லிங்கனுக்குக் கடிதத்தில் எழுதினாள். அந்தக் கடிதத்தில்,

மரியாதைக்குரிய திரு. லிங்கன் அவர்களுக்கு சிறியவளான கிரேஸ் பெடல் எழுதிக் கொள்வது,

ஐயா, உங்களுக்குக் கடிதம் எழுதுவதை நான் பெருமைக்குரிய விஷயமாக நினைக்கிறேன். எனக்குச் சகோதரர்கள் இருக்கிறார்கள்.

உறவினர்கள் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் உங்களுக்கு வாக்குப் போடும்படி வேண்டிக் கொள்கிறேன்.

நீங்கள் தேர்தலில் வென்றால் நாட்டுக்கு நல்லது செய்வீர்கள் என்ற நம்பிக்கையும் எனக்கிருக்கிறது. ஆனாலும் ஐயா, தாங்கள் தேர்தலில் வெல்லுவீர்களோ என்று சந்தேகமாக இருக்கிறது. காரணம் வேறொன்றும் இல்லை. தங்களின் மெலிந்த அழகற்ற தோற்றம்தான். தங்களின் முகத்திற்கு மீசையும், தாடியும் இருந்தால் அழகாக இருக்கும் என்று நினைக்கிறேன். தலைவனுக்குரிய மிடுக்குத் தனமான தோற்றம் உங்களுக்குக் கிடைக்கும் என நினைக்கிறேன்.

உங்களுடைய தோற்றம் அழகாக இருந்தால் பெண்களின் ஆதரவு கூட வரும். அவர்களின் தூண்டுதலால் அவர்களின் கணவர்களின் வாக்குக்களும் உங்களுக்குக் கிடைக்கும். நீங்கள் வெற்றி பெறுவது உறுதி. தாங்கள் தேர்தல் வேலைகளில் மூழ்கியிருப்பீர்கள். எனக்குக் கடிதம் எழுத நேரமிருக்காது. கடிதம் கிடைத்தை வேறு யாராவது மூலமாகவேனும் எனக்குத் தெரிவியுங்கள்.

இவ்வாறு எழுதிய கடிதத்திற்குச் நன்றி தெரிவித்து லிங்கன் தன் கைப்படக் கடிதம்

எழுதினார். சிறுமி கிரேஸின் கடிதம் லிங்கனின் சிந்தனையைத் தூண்டியது. தாடியும் மீசையும் வைத்துக் கொண்டார். குடியரசுத் தேர்தலில் லிங்கன் வெற்றி பெற்றார். ஆட்சித் தலைவர் பொறுப்பை ஏற்பதற்காக லிங்கன் வாஷிங்டன் நோக்கிச் சென்றபோது கிரேஸ் வசித்த கிராமத்துப் புகையிரத நிலையத்தில் தரித்து நின்ற வேளையில் மக்கள் அவரை வரவேற்றார்கள்.


அந்தவேளையில், லிங்கன் அவர்களுக்கு நன்றி கூறினார். கடிதத்தை எழுதிய சம்பவத்தையும் கூடியிருந்த மக்களுக்குத் தெரிவித்தார். பின் "அந்தக் கடிதத்தை எழுதிய சிறுமியாகிய கிரேஸ் பெடல் இக் கூட்டத்தில் இருப்பாளேயானால், ஒருதரம் அவளைப் பார்க்க விரும்புகிறேன். என்று கூறினார். தன் தந்தையோடு வந்திருந்த கிரேஸ் குடியரசுத் தலைவரான ஆபிரகாம் லிங்கனால் கௌரவிக்கப் பட்டாள்.

குடியரசுத் தலைவரான ஆபிரகாம்லிங்கனின் செயல் அவரின் நற்குணத்தைக் காட்டுகின்றதல்லவா!. சிறுமி கிரேஸின் கடிதத்தை மதித்துத் தாடியும் மீசையும் வைத்துக் கொண்ட கம்பீரமான உருவம் தான் இன்று வரை லிங்கனை எங்களுக்கு நினைவு படுத்துகின்றது.

Nektar für die Kinder

Nectar pour les enfants

Nectar for the childrens



உண்ண உணவின்றி,
உடுக்க உடையின்றி,
கல்வி அறிவின்றி,
யுத்தம், கலவரங்களால்,
இன்னலுறும் இளம்சிறார்களுக்கு
இச்சஞ்சிகையைக்
காணிக்கையாக்குகின்றோம்.

புனிதமலர் ராஜேஸ்வரன்

"Siruvar Amutham"
Alefstr- 11
50189 Elsdorf
GERMANY
02271 / 66527